



# ஜாலான் துவாங்கு அப்துல் ரஹ்மான் சந்தையின் இறுதி நாளில்

## 8.8 டன் குப்பைகள் அகற்றப்பட்டன

கோலாலம்பூர், ஏப். 2 -

கோலாலம்பூரின் மத்தியப் பகுதியில் உள்ள ஜாலான் துவாங்கு அப்துல் ரஹ்மானில் நடந்த நோன்புப் பெருநாள் சந்தையின் இறுதி நாளில் மட்டும், அங்கு சிதறிக் கிடந்த மொத்தம் 8.8 டன் குப்பைகளை, கோலாலம்பூர் மாநகராண்மைக் கழகம் (டிபிகேஎல்) அகற்றி இருக்கிறது.

அகற்றப்பட்ட மொத்த குப்பைகளில் 250 கிலோ பொருட்கள் மறுசுழற்சி செய்யப்பட்டதாகவும் அவற்றில் நெகிழி, காகிதம் மற்றும் அலுமினியப் பொருட்களும் அடங்கும் என்றும் அது கூறியது.

அலாம் புளோரா நிறுவனத்துடன் சேர்ந்து மேற்கொள்ளப்பட்ட குப்பைகளை அகற்றும் பணியானது கால்வாய்கள், நடைபாதைகள் மற்றும் அதன் சுற்றுப் பகுதிகளில் குப்பைகள் இல்லாமல் இருப்பதை உறுதிப்படுத்தும் நோக்கத்திலானது என்று, டிபிகேஎல் தெரிவித்தது.

"ரமடான் மாதம் முழுமையிலும் ஆயிரக் கணக்கானோர் வந்து சென்ற அப்பகுதி, நோன்புப் பெருநாள் சந்தையின் இறுதி நாளில் சுத்தமாக இருப்பதை உறுதிப்படுத்துவதற்காக உடனடியாக அங்கு குப்பைகளை அகற்றும் பணி மேற்கொள்ளப்பட்டது" என்று, அது கூறியது.